

உ
சிவமயம்

அமரர்

# திருமதி சிவபாக்கியம் கந்தசாமி

அவர்களின்

இறைபேறு எடுத்தியம்பும்

# நினைவுக் கலசம்

2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



ஆலங்கேணி பூநகரியை பிறப்பிடமாகவும் –
கெக்கிராவை – மற்றும்
உதயநகர் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி கந்தசாமி சிவபாக்கியம்

அவர்களின்

இறைபதப் பேறு எடுத்தியம்பும்

# நினைவுக்கலசம்

2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதம் பணிந்து ......
# "படையல்" செய்தோம்!

ஆயிரம் ஆயிரம் உறவிருந்தாலும்
அன்னை உமக்கு நிகராகுமா?
சேயர்கள் எம்மை செய்தவத்தாலே
சிறப்புடன் வாழ உழைத்தீரே!
தாயென வந்து தகுதிகள் ஈந்து
தரணியில் ஆக்கி வைத்தவரே!
போயினி எங்கும் புன்னகை காண்போம்?
பொல்லா விதிதான் மாய்த்ததுவோ?

* * *

கண்களில் நீதான் சுமந்தோம் அம்மா
கலக்கம் கொண்டோம் - உமைப்பிரிந்தோம்!
எண்ணம் யாவும் இங்கே கலங்கி
இதயம் நெகிழ்ந்தோம் - துயர் உற்றோம்!
பண்ணில் உங்கள் புகழைப் பாடி
படையல் செய்தோம் உம்பாதம்
கண்ணில் ஒற்றி கடவுள் பாதம்
கடுகி அமர அஞ்சலித்தோம்!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உதயநகர்,
கிளிநொச்சி.

அன்புமக்கள், மருகர்
பேரர் - உறவோர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

பாசத்தால் நிறைந்த நெஞ்சம்
பண்பிலே நீங்கள் தெய்வம்
நேசத்தால் நிறைந்த உள்ளம்
நினைவிலே நிறையும் அன்னை

அமரர்

# திருமதி சிவபாக்கியம் கந்தசாமி

அவர்கள்

உருவாய்
12
02
1948



அருவாய்
23
06
2019

## திதி நிர்ணயம்

திருவுறு விகாரிஆனி செம்மைசேர் தேதிஎட்டு
வருதரு அபரபக்க ஷஷ்டியாம் திதியென்றோது
பெருமகள் எங்களன்னை சிவபாக்கியம் மண்ணை நீத்து
அருமைகொள் இறைவன்தாளை அடைந்திட்ட நாளதாமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# தோத்திரப்பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதி மிக்க
உருவேஎன் னுறவேஎன் ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேஎன் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண் துறையுறையும் அமர ரேறே.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ யருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள் புரியாயே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றுஅருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
தில்லைச் சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
"பிறவாமை வேண்டும்; மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும்போதுன்; அடியின்கீழ் இருக்க" என்றார்.

## திருப்புகழ்

உம்பர் தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதற் றுணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள்சைவ நீதிவிளங்குக உலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

# கௌரி காப்பு

திருச்சிற்றம்பலம்

விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மோடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வாராமற் கா.

**வேண்டுதற் கூற்று**

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்அரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்துவந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளித் தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா உனையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழி வழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியரே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நல்லதெலாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்தி மனத்துடனே பரவியணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால் உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரகுருபர சுவாமிகள்

அருளிச் செய்த

# சகலகலாவல்லி மாலை



வெண்டா மரைக்கன்றி நின்பதங்
　　தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ
　　சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க ஒளித்தான்பித்
　　தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
　　சகல கலாவல்லியே!

நாடும் பொருட்சுவை சொற்சுவை
　　தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
　　பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற்கொடியே
　　கனதனக் குன்று மைப்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
　　சகல கலாவல்லியே!

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமுது
　　ஆர்ந்துன் அருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ
　　உளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
　　கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
　　சகல கலாவல்லியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
வட நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே!

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந் தாட் கமலத்து
அஞ்சத் துவசம் உயர்த்தோன்
செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே!

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்காய்
எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங்காலு மன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே!

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கண்நல்காய்
உளங் கொண்டு தொண்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே!

சொல்விற் பனமும் அவதானமும்
கவி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்தடிமை கொள்வாய்
நளினாசனஞ் சேர்
செல்விக் கரிதென் றொருகாலமுஞ்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப்பேறே
சகல கலாவல்லியே!

சொற்கும் பொருட்கும் உயிராமெஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்யார்?
நிலத்தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோடு
அரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே!
சகல கலாவல்லியே!

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்டளவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்டதெய்வம் பல்கோடி யுண்டேனும்
விளம்பில் உன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ?
சகல கலாவல்லியே!

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் சிவபாக்கியம் கந்தசாமி அவர்களின்

# மண்ணக வாழ்க்கைப் பதிவுகள்

நாற்புறமும் கடல்சூழ்ந்த -
நற்றவத்தால் பொலிவெய்தும் இலங்கை நாடு
இலங்கையின் வடபால் -
மருதமும் முல்லையும் மகிழ்ந்து குலவ
வயல்வளமும் - கனிவளமும் இயற்கை எழிலும்
ஒன்றிலங்கி விளங்கி பூநகரிப் பொற்பதியில்
விருப்புடன் விவசாயம் ஆற்றி உயர்ந்த
விந்தை கொள் கந்தையா தன் இல்லத் தலைவியாய்
சார்புகழ் சரஸ்வதிப் பிள்ளையை உவந்து
தக்கதாம் இல்லறம் கண்டு பொலிந்தார்
தானமும் தவமும் தயவும் பக்தியும்
கொண்ட அக்குடியின் முதன்மகளாகவே
சீர்மிகு சிவ பாக்கியம் எனும் செல்வி
சிந்தை மகிழ வந்தே உதித்தாள்
சிவபாக் கியத்தின் உடன் பிறப்பாளனாய்
அமரர் நடராசா எனும் நற்றவன் வாய்த்தனன்.

❋ ❋ ❋

சிவபாக் கியமும் செல்வமாய் வளர்ந்து
சிறுவயதினிலே ஆரம்ப கல்வியை
பூநகரி வன்னேரிக்குளம் பொலிவுறப் பெற்று
உயர்கலை பயில திருநெல்வேலி அடைந்தனள்
முத்துத்தம்பி வித்தியா சாலையில்
முந்து உயர்தர் கலைகள் பயின்று
அன்பும் அறிவும் அடக்கமும் பெற்று
அயலவர் சுற்றம் போற்றி வாழ்த்திட
பொன்மனச் செல்வி திருமணம் கண்டனள்.
பூநகரி தன்னில் பொலிவுறப் பிறந்து
வன்னேரிக் குளத்தில் வதிந்த மேலவர்
சரவண முத்து தங்கம் மாவெனும்
சால்பினர் ஈந்த மூத்த திருமகன் -
இலங்கையின் தெற்கமை கெக் கிராவையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதமுற வர்த்தகம் ஆற்றிய மேலவன்
கொக்கிராவை கந்த சாமி என்று
அன்புடன் ஊரார் அழைத்திடும் சீரினன்
கந்த சாமியாம் கண்ணியன் அன்னவள்
கரம்பற்றி அணைந்து கணவனென்று ஆயினன்.

❋ ❋ ❋

வன்னேரிக் குளத்திலும் கெக்கிரா வையிலும்
வைகி வளர்புகழ் கொண்டே வாழ்ந்து
இறைவன் கருணையும் - இனிய தவங்களும்
இதமுறப் பெற்று இவர் மனைமாட்சி கண்டனர்
பண்ணிய புண்ணியச் செயல்கள் உவந்திட
பாலகர் எழுவரை பரிவுடன் பெற்றனர்.
இனிமையாய் இலண்டன் மாநகர் வாழ்பவள்
இதமுறு ஏகம்பர நாதன் நாயகி -
றசிந்தன் றஜீவனா சானுஜன் எனவரு
இளையவர் பேற்றும் இதமிகு தாயவள்
விஜய நிர்மலா முதன் மகளாகியே
சிவபாக் கியத்தின் மனதில் அமர்ந்தனள்
மாண்பொடு லண்டன் நற்பதி வாழ்ந்திடும்
வண்மையள் - தேனுஜன் திலக்சனா எனவரு
காண்பரு புகழவர் மைந்தரின் தாயவள்
மதிவதனா இரண்டாம் திருமகள் ஆயினள்.

❋ ❋ ❋

லண்டன் மாநகரில் இதமுற வாழ்பவள்
இதய நாயகனாய் சூரிய குமாரெனும்
பெருமையன் தன்னையே பேருறக் கொண்டிங்கு
ஜோஸ்வா ஜோஜிதன் மேனுகா எனவரு
மழலையர் தம்மை ஈந்த தாயவள்
மணிமேகலா மூன்றாம் திருமகள் ஆயினள்
சுந்தரச் சுவீச்சலாந்து நாட்டில் சுகிப்பவள்
சுடர்மிரு ஸ்ரீதரன் செல்வ நாயகி
சாருஜன் சகானா என்றிடு செல்வரின்
சிறப்புறு தாயவள் சியாமளா பெயரினள்
நான்காம் திருமகள் என்றே வந்திங்கு
வருபுகழ் சேர்த்தனள் - வசந்தம் தழைத்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லண்டன் நகரில் இனிதுற வாழ்பவள்
திவிஷன் சுஜானா எனவரு செல்வரின்
அன்புத் தாயவள் பிரமிளா பெயரினள்
ஐந்தாம் மகளென அன்பில் உதித்தனள்

❋ ❋ ❋

இதமிரு லண்டன் நகரில் வாழ்பவன்
இனிமைகொள் ஜெயரஞ்சினியின் நாயகன்
அபிநாஷ் அபிசயன் அக்சனா எனவரு
அன்புச் செல்வரின் அரிய தந்தையாம்
பிரதீபன்எனும் பெயரினன் ஆறாம்
மைந்தனென் றாகி மகிமை சேர்த்தனன்
சொந்த மண்ணதில் சுவையுற வாழ்பவன்
சுந்தர றிஷாயினி சுவைமிகு நாயகன்
தேனுஷா எனவரு செல்வியின் தந்தையாம்
பார்த்தீபன் இளைய மகனென ஆயினன்

❋ ❋ ❋

பெற்ற பிள்ளைகள் பெருமை பெற்றிட
உற்ற கல்வி கலைகளை நல்கியும்
மற்றவர் வளர்ந்து வயசை எய்திட
வாய்த்த மங்கல நிகழ்வு நடத்தியும்
பற்றுடை மருகர் பலம்பெற் றுயர்ந்திட
பகரும் கடமைகள் பற்பல ஆற்றியும்
நற்ற வத்தினால் நயந்திடு பேரர்கள்
நன்மை பெற்றிட நாளும் கருதியும்
சுற்றம் போற்ற சொந்தம் வாழ்த்திட
சுவையுற சிவபாக்கியமும் மகிழ்ந்தனள்

❋ ❋ ❋

ஒன்றொடு ஒன்பது ஒன்பது ஆறெனும்
உற்றதாம் ஆண்டிலே உயிரனைய கணவரை
கன்மனக் காலன் கையினிற் கொடுத்து
கலங்கி நலிந்தனள் சிவபாக்கியமே!
கணவன் செய்த வணிக முயற்சிகள்
அனைத்தையும் தானே தலையிற் சுமந்து
கடைசி மகனாம் பார்த்தீபன் தன்னொடும்
வளர்ப்புப் பேரன் தனுஷன் அவனொடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெக்கிராவையில் வாணிபக் கடமைகள்
ஆற்றி இறுதியில் உதயநகர் வந்தனள்
இளைய மகனாம் பார்த்தீபன் தன்னொடு
இருந்தே இறுதி நாட்களை கழித்தனர்.

❋ ❋ ❋

பிள்ளைகள் பேரர் மருகரைக் காண
லண்டன் சுவிஸ் என நாடுகள் சென்றும்
அங்கே அவரொடு அன்புற வாழ்ந்தும்
அன்னை சிவபாக்கியம் மகிழ் வெய்தினர்
மூன்றாம் மகளாம் மணிமேகலாவின்
மகளது ருதுஷாந்தி நிகழ்வை ஊரிலே
நடத்த விரும்பி அதற்காய் உழைத்திடும்
நாளில் விதியது குறுக்கே வந்தது.

❋ ❋ ❋

குலதெய்வம் ஆகிடும் செல்லியா தீவு
முத்து வைரவர் பொங்கல் விழாதனில்
கலந்து வணங்கி கிளிநொச்சி வந்தவர்
மூன்றாம் நாள்தனில் மூச்சை நிறுத்தினர்
வெளிநாடுள்ள பிள்ளைகள் தன்னொடு
தொலைபேசியிலே உரையாடும் நேரத்தில்
மயங்கிச் சரிந்தவர் மனங்கள் பதறிட
மண்ணை விட்டே விண்விளக் காயினர்
விகாரி வருஷம் - இரண்டா யிரத்து
பத்தென்பது எனும் ஆண்டினில் ஆனி
இருபத்து மூன்றாம் நாள்தனில் அன்னை
இம்மண் துறந்து இறைதாள் அடைந்தனர்.

❋ ❋ ❋

எழுபத்து ஒருவருடம் இந்த உலகில்
ஏற்றமற வாழ்ந்த நங்கை இன்று இல்லை
பழுதில்லா வாழ்வுகந்த பாச மங்கை
பரமன்தாள் மலராக அமைந்தே போனாள்
விழுதெல்லாம் வேதனையால் துடித்து வாடி
விம்மலுற அன்னையவள் கனவாய் ஆனால்
அழுதிங்கு ஆவதென்ன அரனின் பாதம்
அன்னையவள் அமர்கவென அஞ்சல் செய்வோம்!

❋ ❋ ❋ ❋ ❋



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவும் - பேதலிப்பும் -

### *- பிள்ளைகள் பேதலிப்பு -*

பத்துமா தம்சுமந்து பாரில் எமையீந்து
பாலோடு சேர்த்து பக்குவங்கள் எமக்கீந்து
உத்தமமா வாழ்வுநல்கி ஊர்போற்ற வாழவைத்து
உண்மையன்பை ஈந்துநின்ற உத்தமியே எம்மம்மா!
சொத்தெனவே உம்மைச் சூழநாம் இருக்கையிலே
சோகத்தை ஈந்து துயர்தந்து எங்குற்றீர்?
வித்தாக நின்றிங்கு விரும்பிய உம் கனவெல்லாம்
வெல்லவைப்போம் அம்மா! இறைதாள் அமைதி கொள்க!

### *மருமக்கள் மனத்துயரம்*

பெருமையெலாம் எமக்கீந்தீர் பேரருளால் உயர்ந்துநின்றீர்!
பெண்ணிற் பெருந்தக்க தெய்வமாய் வாழ்ந்திருந்தீர்!
மருமக்கள் என்றுவந்த எம்மையெலாம் புரந்திங்கு
மறுமக்கள் என்றே மகிழ்ந்து பணிசெய்தீர்!
வருபுகழின் நாயகியே - வடா மலர்க்கொடியே!
வாஞ்ஞைமிகு மாமியாரே! வாடவைத்து எங்குசென்றீர்?
உருகியும் தாள்பணிந்து உம்பர்பிரான் திருவடிக்கீழ்
உத்தமியே நீரமர உணர்வொன்றி அஞ்சலித்தோம்!

### *- பேரர்கள் பெருகு துயர் -*

பழுத்தபழ மாகியிங்கு பக்குவங்கள் சொல்லிநின்ற
பாட்டியம்மா எங்கள் குலத்தின் திருவிளக்கே!
வழுத்துதெய்வ மெனநின்று எமைக்காத்த பெருமகளே!
வதங்கியழவைத்து வான்போன மர்மமென்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளுத்தமனம் எம்மேல் வீசுமன்பு உயர்குணங்கள்
விதைத்திட்ட தெய்வமே விதிதான் கொடியதம்மா
தொழுதும் புகழ்பாடி தூயஇறை பதம்வணங்கி
துயரின்றி இறைபாதம் நீரமர அஞ்சலித்தோம்.

### *மைத்துனர் - மைத்துனியர்*

மனங்கவர்ந்த மைத்துனியே! மண்ணின் மகிழ்விளக்கே!
இனம்போற்ற வாழ்ந்திட்ட இனியவளே இம்மண்ணில்
தனங்குவிய வாழ்ந்தீர் தக்கவர்க்கு நலம் ஈந்தீர்
கனமிகுந்த துயரீந்து பறந்தீரோ? அமைதி கொள்க!

### *உற்றார், உறவினர், ஊரவர்கள்*

சீரெல்லாம் பெற்றிங்கு திகழ்ந்து வாழ்ந்த செம்மையரே!
ஊரெல்லாம் ஒளிகமழ்ந்து உயர்ந்துநின்ற உத்தமியே!
பாரெல்லாம் பரவுபுகழ் சிவபாக்கிய செல்வியரே!
நீரெல்லாம் எம்கண்கள் சுமக்கவைத்து எங்குற்றீர்?

### *தேற்றம்*

மண்மீது பிறப்பிறப்பு மாற்றா நியதி!
மாய்ந்து பின்பு பிறப்பதெலாம் மறையாநீதி!
கண்கலங்கி அழுவதனால் ஆவதில்லை!
கடவுளவன் நீதியது கவலை வேண்டாம்!
உண்மையுற இம்மண்ணில் வாழ்ந்த எங்கள்
உயரன்னை இறைபாத மலராய் ஆனாள்!
வண்ணமுற அரன்பாதம் அன்னை வாழ
வணங்கியவள் புகழ் சொல்வோம் - சிவமயமே!

சுபம்

**மலராக்கம்:-** "கலைச்சாகரம்"

**கவிஞர் த. நாகேஸ்வரன்**

**தென்மராட்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் சொரிகின்றோம்



| மண்மகிழ | கண்நெகிழ |
| --- | --- |
| 1948 | 2019 |
| 02 | 06 |
| 12 | 23 |

## அமரர் கந்தசாமி சிவபாக்கியம்

இல. 245, உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி

அன்பின் திருவுருவாய்,
பண்பின் சிகரமாய்,
பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய்
வாழ்வை வழிநடத்திய
அன்புத்தெய்வமே!
நிலையற்ற உலகிது என்று
நிஜம் தேடி விரைந்தீரோ.....?

ஓம்சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12 | 23 |
| ❋ | ❋ |
| 02 | 06 |
| ❋ | ❋ |
| 1948 | 2019 |

அமரர்

## கந்தசாமி சிவபாக்கியம்

அவர்கள்

மீளாத்துயில் கொண்டு எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரோ
கலையாத உம் நினைவுகளுடன் உதிரும்
கண்ணீர் புக்களால் அர்ச்சித்து
உம் ஆத்மா சாந்தியயடைய எங்கள்
கண்ணீர்த் துளிகளைக்
காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம்சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!

துயருடன்

துரைராசா ராசா, பவளம் குடும்பத்தினர் (இந்தியா, சென்னை)
யசோதரன் கஜேந்தினி குடும்பம் (லண்டன்)
ஜெயகாந்தன் துஸ்யந்தினி குடும்பம் (சுவிஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப விருட்சம்

* கந்தையா + * சரஸ்வதிப்பிள்ளை
↓
* சிவபாக்கியம்
* நடராசா

* சரவணமுத்து + * தங்கம்மா
↓
* கந்தசாமி

*** சிவபாக்கியம் + * கந்தசாமி**
↓

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| விஜயநிர்மலா | மதிவதனா | மணிமேகலா | சியாமளா | பிரமிளா | பிரதீபன் | பார்த்தீபன் |
| + | + | + | + | + | + | + |
| ஏகாம்பரநாதன் | ............... | சூரியகுமார் | ஸ்ரீதரன் | ............. | ஜெயரஞ்சினி | நிஷாயினி |
| ↓ | ↓ | ↓ | ↓ | ↓ | ↓ | ↓ |
| றஜிந்தன்<br>றஜீவனா<br>சானுஜன் | தேனுஜன்<br>திலக்சனா | ஜோஸ்வா<br>ஜோஜிதன்<br>மேனுகா | சாருஜன்<br>சகானா | திபிஷன்<br>சுஜானா | அபிநாஷ்<br>அபிசயன்<br>அக்சனா | தேனுஷா |

* அமரர்களைக் குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளம் கனிந்த நன்றிகள்

2019-06-23 அன்று இறைபதமெய்திய
எமது அன்புத் தெய்வத்தின் மரணச்செய்தி கேட்டதும்
உடன்வந்து துயர் பகிர்ந்து உதவியவர்கள்
மரணச்சடங்கின்போது நேரில் சமூகமளித்து எமது
துன்பத்தில் பங்கு கொண்ட உற்றார், உறவினர்,
அயலவர்கள், நண்பர்களிலிருந்தும் தொலைபேசி
தொலைநகல் மூலம் அனுதாபம் தெரிவித்த
அன்பர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி அச்சிட்டு
வெளியிட்டோர் மற்றும் இறுதிக்கிரியைகளிலும்
ஊர்வலத்திலும் பங்கு கொண்ட பற்றுமிக்க
உள்ளங்களுக்கும் எமக்கு உணவு சிற்றுண்டிகளை
வழங்கி உதவிய அன்பு உள்ளங்களுக்கும் அன்னாரது
அந்தியேட்டிக்கிரியைகள் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளை
சிறப்புற நடாத்திய சிவாச்சார்யார்களுக்கும் அத்துடன்
இன்றைய ஆத்மசாந்தி வழிபாட்டில் கலந்துகொண்டு
சிறப்பித்த உங்கள் அனைவருக்கும் மேலும் இம்மலரினை
சிறப்பாக வடிவமைத்து அச்சிட்டுதந்த திருக்கணித
பதிப்பகத்தினருக்கும் இன்னும் பலவழிகளில் உதவிபுரிந்த
அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளை
தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது**
**அன்றே மறப்பது நன்று"**

**உதயநகர் கிழக்கு.**
கிளிநொச்சி.

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்.**

திருக்கணித பதிப்பகம் - சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org